**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.**

ம.சா. 3 நாள்: 01.09.2025

**வழக்கு எண் MCOP No. 25/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பன்னீர் செல்வம் | ஊர் | : மதுரை |
| கணவர் பெயர் | : வேலுச்சாமி | தாலுகா | : மதுரை |
| தொழில் | : முதுநிலை உதவியாளர் | வயது | : 50/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் 3 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.அவற்றை மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்களாக அங்கீகரித்து கொள்ள வேண்டி பிராத்திக்கிறேன்.

1. தேவதானப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 155/2022 நிர் வழக்கு சம்பந்தமாக காவல் துறையினரால் வரையப்பட்ட மாதிரி வரைப்படம் xerox நகல்**எ.ம.சா.ஆ.12**

2. எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட 1 ஆம் எதிர்மனுதாரருக்கு

பாத்தியப்பட்ட TN 32 AT 5008 என்ற பதிவு எண் கொண்ட காரின் காப்பீட்டு சான்றிதழ் அதன் விதிமுறைகளுடன் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.13**
மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த சமயத்தில் 1ஆம் எதிர் மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அந்த காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் விபத்து சமயத்தில் குடி போதையில் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து நடந்த இடம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்க கூடாது என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கவனமாகவே வண்டியை ஓட்டி வந்தார் என்றும் 1ஆம் எதிர் மனுதாரர் தான் கவனக்குறைவாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/– C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**